# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, சமூக நிவாரண மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, நவெம்பர் மாதம் 13 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

***விலை : ரூபா 11.00*** ***தபாற் செலவு : ரூபா 5.00***

## 2009 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, சமூக நிவாரண மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2009 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. கூ. 24/2008

### சமூக நிவாரண மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"சமூக நிவாரண மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்குமுன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும், அத்துடன் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க, சமூக நிவாரண மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2**. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "சமூக நிவாரண மன்றத்தின்" தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சமூக நிவாரண மன்றம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் இருத்தல் வேண்டும். சமூக நிவாரண மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** (1) கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:-

(அ) குறைந்த சிறப்புரிமைகள் உள்ள தனியாட்களுக்கு, குடும்பங்களுக்கு மற்றும் சமூகப் பிரிவுகளுக்கு உதவி செய்தல் ;

(ஆ) வேலைவாய்ப்பை இழத்தல், நோயுறுதல், அங்கவீன மடைதல், இறத்தல் அல்லது வேறு காரணங்களால் கஷ்டப்படுகின்ற தொழிலாளிகளின் மற்றும் விவசாயி களின் குடும்பங்களுக்கு உதவிசெய்தல் ;

(இ) தாமாகவே சேவையிலிருந்து நீங்கியோர், ஓய்வு பெற்றோர் அல்லது வெளிநாட்டு சேவையிலிருந்து திரும்பிவந்த தொழிலாளிகளுக்கு அவர்களுடைய சேமிப்புக்கள் முகாமைசெய்யப்படுதலில் அல்லது சிறிய அல்லது நடுத்தர வியாபாரத்தாபனங்களை தொடங்குதலில் ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் உதவிசெய்தல் ;

(ஈ) வெளிநாடுகளில் வேலைசெய்யும் தொழிலாளிகளின் குடும்பங்களுக்கு அவர்களின் நன்மைகளை மேம் படுத்துவதன்பொருட்டு ஆலோசனைச் சேவைகள் வழங்குதல் மற்றும் உதவிசெய்தல் ;

(உ) வியாபாரத்தாபனங்கள் கைவிடப்படுதல், ஊழியர் களைக் குறைத்தல், ஊழியர்கள் தேவைப்படாமை அல்லது வேறு காரணங்களினால் வேலையை இழந்த தொழிலாளிகளுக்கு சுயதொழில் வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்கு அல்லது மாற்று வேலைபெறுவதற்கு உதவி செய்தல் ;

(ஊ) அவர்களது வேலைகளிலான பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் உரிமைக்கோரிக்கைகளைச் செய்தல் பற்றி தொழிலாளிகளுக்கும் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் மற்றும் உதவிசெய்தல் ;

(எ) மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆலோசனைச் சேவைகளை அல்லது சிகிச்சைகளை அளித்தல் அல்லது அளிப்பதற்கான ஏற்பாடுகளை மேற் கொள்ளுதல் ;

(ஏ) குறைந்த சிறப்புரிமைகளுள்ள இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் சுயதொழில்வாய்ப்புக்களில் ஈடுபடு வதற்கான அல்லது வேலைவாய்ப்புக்களைப் பெறு வதற்கான தொழிற்பயிற்சிகளை வழங்குதல் அல்லது வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் உதவிசெய்தல் ;

(ஐ) குறைந்த சிறப்புரிமைகளுள்ள குடும்பங்களுக்கு வீடுகளை வழங்குதல் அல்லது வீடுகளை அமைக்க உதவியளித்தல் அல்லது வீடுகளை அபிவிருத்தி செய்வதற்கு உதவிசெய்தல் ;

(ஒ) குறைந்த சிறப்புரிமைகளுள்ள மகளிர் மற்றும் பிள்ளைகளின் போஷனை நிலைமை பற்றிய விசேட கவனிப்புகளுடன் மக்களின் சுகாதாரநிலையை அபி விருத்தி செய்தல் ;

(ஓ) புகைத்தல் பழக்கத்தையும் மற்றும் மதுபானப் பாவனையையும் தொழிலாளரிடையேயும் அவர்களின் குடும்பத்தினரிடையேயும் இருந்து தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் ; அத்துடன்

(ஔ) இயற்கையை பாதுகாத்தலும் மற்றும் அபிவிருத்தி செய்தலும் ;

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதில் இனம், சாதி, சமயம், மொழி, பால் அல்லது அரசியல் கருத்து என்ற அடிப்படைகளில் அமைந்த வேறுபாடுகள் இல்லாமல் அத்தகைய நடைமுறைப்படுத்த லானது நிறைவேற்றப்படுதலைக் கூட்டுத்தாபனமானது உறுதிப் படுத்துதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.

**4**. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வருவனவற்றிற்கான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்துக்காக ஏதேனும் அசைவுள்ள, அல்லது அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல் அல்லது ஆறாம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைவாக அவற்றைக் குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பராதீனப்படுத்தல், பாரபந்தத்துக்குட்படுத்தல் அல்லது வேறுவகையில் கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் மூலமாகவோ செய்துகொள்ளுதலும் மற்றும் நிறைவேற்றுதலும் அல்லது புரிதலும் ;

(இ) காசாகவோ அல்லது பொருளாகவோ கொடைகளையும் நன்கொடைகளையும் மற்றும் அன்பளிப்புகளையும் ஏற்றுக்கொள்ளுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனம் உகந்ததெனக் கருதும்முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்புடனும் கூட்டுத்தாப னத்தின் நோக்கங்களுக்காக பணம் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும் மற்றும் பணம் கடனாகப் பெறுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களிற்கு உடனடியாகத் தேவைப்படாத அதன் நிதிகளை முகாமைச்சபையானது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் முதலீடு

செய்தலும் மற்றும் ஏதேனும் வங்கியில் நடப்புக் கணக்கை அல்லது சேமிப்பு அல்லது வைப்புக் கணக்கைத் திறத்தலும், செயற்படுத்துதலும், பேணுதலும் அல்லது மூடுதலும் ;

(ஊ) நூல்கள், சஞ்சிகைகள், பருவவிதழ்கள் அல்லது ஏனைய இலக்கியங்களை வெளியிடுதல் அல்லது வெளியிடுவித்தல் அத்துடன் நூலகங்களைத் தாபித்தலும் பராமரித்தலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடம்மாற்றுதல், அவர்களின்மீது ஒழுங்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவிநீக்குதலும், அவர்களின் சேவைக்கான நியதிநிபந்தனைகளை விதித்துரைத்தலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கிணங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தவிசாளர், துணைத் தவிசாளர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், உதவிப் பொருளாளர் மற்றும் வேறு ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ள முகாமைச்சபை (இதனகத்துப்பின்னர் "முகாமைச் சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்றினால், இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் முகாமைச்சபையாதல் வேண்டும் என்பதுடன், அது கூட்டுத்தாபனத்தின் விதிகளின்கீழ்ப் புதிய முகாமைச்சபையொன்று நியமிக்கப்படும் வரைக்கும் பதவி வகித்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மையைக் கொண்டு பின்வரும் விடயங்கள் எல்லாவற்றிற்கும் அல்லது அவற்றுள் எவையேனும் விடயங்களுக்காக, இச்சட்டத்தின் அல்லது

எழுத்திலான வேறு சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதன வாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்:-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், மீளப்பெறுதல் அல்லது விலக்குதல் ;

(ஆ) முகாமைச்சபையின் பதவிதாங்குநர்களைத் தேர்ந் தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அவர்களின் தத்து வங்களும், கடமைகளும் ;

(இ) முகாமைச்சபையின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத் தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமை களும் அத்துடன் முகாமைச்சபை உறுப்பினர்களின் பதவிக்காலமும் அத்துடன் சபை உறுப்பினர்களின் வெற்றிடங்களை நிரப்புதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர் கள் அத்துடன் சேவையாளர்கள் என்போரின் தத்து வங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) முகாமைச்சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அக்கூட்டங்களில் அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங் களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரல்களும் மற்றும் அதற்கான கூட்டநடப் பெண்ணும் அதில் கருமமாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் மற்றும் அதன் நிதிகளின் கட்டுக்காப்பும் ; அத்துடன்

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமையும், அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதை போன்ற அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**7**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர் மற்றும் செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி, எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டும். அப்படிக் கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப் படற்பாலனவுமான கடன்கள்.*

**8**. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று உள்ளதான மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இதனால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களிற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்றவகையாக, இதுவரை பெறப்பட்ட அல்லது இனிமேல் பெறப்படும் பணங்கள் யாவும் முகாமைச்சபை தீர்மானிக்கக் கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட எல்லா பணத்தொகைகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் முகாமைச்சபையினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுக்கொருமுறை கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கத்திற்காக "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

*கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவனம் அல்லது நிறுவனங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ளனவோ அந்த வேறேதும் நிறுவனமாக அல்லது நிறுவனங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் நிறுவனத்திற்கு அல்லது நிறுவனங்களிற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் வேளையில் அல்லது கலைக்கப்படுவதற்கு நேர்முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் குழுவின் உரிமைகளையேனும் அல்லது கூட்டிணைக்கப்பட்டவேளை உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*